DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.96/2020 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அரவிந்தன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஆறுமுகம் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 18.06.2025.

முதல் விசாரணை

நான் பாலப்பம்பட்டியில் வசித்து வருகிறேன். கோவையில் சிப்கோவில் பணிபுரிந்து தற்போது சென்னை கோடம்பாக்கத்தல் பிலிம் எடிட்டராக வேலை செய்து வருகிறேன். கடந்த 29.04.2019 ம்தேதி பாலப்பம்பட்டியில் சென்ட்ரல் வங்கி சென்று FD சம்பந்தமாக விசாரித்துவிடடு மதியம் 2.50– 3.00 மணியளவில் வெளியில் நின்று கொண்டிருந்த போது உடுமலை – பழனி ரோட்டில் பெரியப்பா எதிர் புறமாக நடந்து சென்று கொண்டிருந்தார். நான் அவரை பார்த்து விட்டு நான் நின்று கொண்டிருந்தேன் மீண்டுமஅவரை பார்த்த போது அவர் நடந்துவந்து கொண்டிருந்தார் அப்போது உடுமலை – பழனீ ரோட்டில் வந்த கேரளா பேருந்து வேகமாக வந்தது, அதிவேகமாக வந்தது. பின்னர் அந்த பேருந்து எனது பெரியப்பாவின் மீது மோதி விபத்து ஏற்படுத்தி விட்டது. உடனே நான் சென்று பார்த்தேன். என் பின்னால் மற்றொரு பெரியம்மா கிருஷ்ணவேணி வந்து பார்த்தார். பெரியப்பாவிற்கு மண்டையில் காயம் ஏற்பட்டிருந்தது. ஊர மக்கள் கூடிவிட்டனர். பெரியப்பா மகன் சிவகுமாருக்கு தகவல் சொல்லப்பட்டது. அவர் வந்தவுடன் ஆம்புலன்ஸ் மூலமாக கோகுல் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்னால்

நானும் வாகனத்தில் மருத்துவமனைக்கு சென்றேன். போலிசார் அங்கு வந்து நடந்ததை கேட்டார்கள். நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அசா.ஆ.1 என குறியீடு செய்யப்படுகிறது. கேரளா பேருந்து அங்கேயே நின்று கொண்டிருந்தது. 4 எண்களை மட்டும் குறித்து கொண்டேன். அந்த எண் 6491 என்று தெரிந்து கொண்டேன். வாகனத்தை ஓட்டியவர் பெயர் தெரிந்து கொள்ளவில்லை. ஒரு வாரம் கழித்து எனது பெரியப்பா இறந்துவிடடார். போலிசார் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**<u>1</u>** உங்கள பெரியப்பா வீடு பாலப்பம்பட்டியல் எங்குள்ளது என்றால் கோவில் ஒட்டி செல்லும் ரோட்டில் வடபுறத்தில் உள் புறமாக செல்ல வேண்டும். அவர் என்ன காரணத்திற்காககிழக்கிலிருந்து மேற்காக வந்தார் என்றால் வங்கிக்கு வருவதாக சொன்னார்கள். சென்டல் வங்கி தென்புறமாக உள்ளது என்றாலும் வங்கி வருவதற்கு ரோட்டை கடநது வந்தார் என்றால் சரிதான். நீங்கள் முதல் முறை பார்க்கும் போது மேற்கிலிருந்து கிழக்காக வந்ததாகவும், ரோட்டை கடக்கும் போது தான் விப்த்து நடந்தது என்றால் விபத்து மண்ரோட்டில் தான் நடந்தது. விபத்து குறிப்பாக எங்கு நடந்தது என்றால் மண் ரோட்டில். வடக்கிலிருநது தெற்காக வரும் போது வாகனம் வருவதை கவனிக்காமல் ரோட்டை கடந்து வந்தததால் விபத்து ஏற்பட்டது என்றாலும் விபத்தை நீங்கள் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல, நான் விபத்தை பார்த்தேன். புகார் வாக்குமூலம் பெற்றது பின்னிட்டு போலிசார் விசாரி க்கவில்லை என்றால் சரிதான். 2 முறை அழைத்தார்கள் என்னால் வர முடியவில்லை. விபத்து உங்கள் பெரியப்பாவின் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்றாலும் ரோட்டை கடக்கும் போது இரண்டு பக்கமும் பார்த்து வந்திருந்தால் விபத்து நடந்திருக்காது என்றாலும் சரியல்ல. பெரியப்பாவின் மருத்துவ செலவு செய்வதற்காகவும் நஷ்ட ஈடு பெற வேண்டி கொடுத்த பொய் புகாருக்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 96/2020 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.2 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணவேணி | | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : |
| கிராமம் | : | | இனம் | : |
| தாலூக்கா | : | | வயது | : |
| Mail ID | : | | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 18.06.2025.

முதல் விசாரணை

நான் பாலப்பம்பட்டியில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். என் கணவர் பெயர் பெருமாள் சாமி. கடந்த 29.04.2019 ம் தேதி 2.45 மணியளவில் நான் பேருந்துக்கு செல்ல வேண்டி பாலப்பம்பட்டி கோவில் அருகில் நின்று கொண்டிருந்தேன்.அபபோ எங்கள் ஊரை காமாட்சி யம்மன் கோவில் பூசாரி ஸ்ரீரங்கன் கிழக்கிலிருந்து மேற்காக சென்று கொண்டிருந்தார். அப்போது மேற்கே இருந்துவந்து டூரிஸ்ட வண்டி அவர் மீது மோதி மண் ரோட்டில் இறங்கி விட்டது. நான் என்ன என்று சென்று பார்த்து அவரை தட்டும் போது பேச்சு மூச்சு இல்லாமல் இருந்தார். பின்னர் அங்கு நிறைய பேர் வந்தார்கள்.அங்கிருந்து கோகுல் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். கேரளா டூரிஸ்ட் வண்டியின் எண் 6491 ஆகும். ஸ்ரீரங்கன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள். இருப்பதை சொன்னேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. கோவில் பூசாரியின் வீடு கிழமேல் ரோட்டில் வடபுறமாக கோவிலை ஒட்டி செல்ல வேண்டும் என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக கிழக்கிலிருந்து மேற்காக சென்றார் என்றால் வங்கிக்கு செல்வதாக எங்களி டம் சொன்னார். சென்டரல் பேங்க் கிழமேல் ரோட்டில் தென்புறமாக உள்ளது என்றால் சரிதான. வடபுறத்திலிருந்து தென்புறமாக வரும் போது ரோடடை கடக்க வேண்டும் என்றால் சரிதான். அப்படி ரோட்டை கடக்கும் போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சத்தம் கேட்டு பின்னிட்டு தான் விபத்து ஏற்பட்டது என்று தெரியும் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 96/2020 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சக்திவேல் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | பழனிசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 18.06.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் பாலப்பம்பட்டியில் வசித்து வருகிறேன். நந்தா டெய்லர் கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 29.04.2019 ம் தேதி 5.30-6.00 மணியளவல் போலிசார் வந்து வரைபடம் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக இருக்க கேட்டு கொண்டார்கள். வரைபடம் வரைந்து விட்டு லேப்டாப்பில் தட்டச்சு செய்தார்கள். ½ மணி நேரம் கழித்து வந்து தட்டச்சு தாளில் கையொப்பம் கேட்டார்கள். நானும் நாச்சிமுத்துவும் விவரங்களை தெரிந்து கொண்டு சாட்சி கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகசர் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. போலிசார் உங்களை விசாரித்து வாக்குமூலம் எழுதினார்களா என்றால் என்னை விசாரிக்கவில்லை. கையெழுத்து போட்ட ஆவணத்தில் லேப்டாப்பில் தட்டச்சு செய்த பின்னிட்டு வந்து கையெழுத்து வாங்கப்பட்டது என்ற விவரம் உள்ளதா என்றால் உள்ளது. அவ்வாறு இல்லை என்றால் அது உங்கள் முன்னிலையில்

தயாரிக்கப்பட்ட பார்வை மகசர் இல்லை என்றால் சரிதான். வரைபடத்தில் சம்பவ இடம் எங்கு காண்பித்திருந்தார்கள் என்றால் ரோட்டிற்கும் மண்ணிற்கும் இடையில். உண்மையில் போலிசார் அங்கு வைத்து தயாரித்திருந்தாலும் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுவிட்டு தற்சமயம் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 96/2020 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.4 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : சிவக்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சீரங்கன் | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 18.06.2025.

முதல் விசாரணை

நான் பாலப்பம்பட்டியில் வசித்து வருகிறேன். மொபைல் கடையில் வேலை செய்து தற்போது சொந்தமாக வைத்துள்ளேன். கடந்த 29.04.2019 ம் தேதியன்று மதியம் 3.00 மணி யளவில் நான் பாலப்பம்பட்டியில் இருந்து உடுமலை மொபைல் கடைக்கு வந்த போது அசா.1 அரவிந்தன் போன் மூலமாக என் அப்பாவிற்கு பஸ்மோதி விபத்து நடந்துவிட்டதாக தகவல் கூறினார்கள். நான் சம்பவ இடம் சென் பார்த்தேன். என் அப்பாவை கோகுல் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பியிருந்தார்கள். நான் என் அம்மாவை அழைத்து கொண்டு மருத்துவமனை சென்றேன். என் அப்பாவிற்கு சுயநினைவு இல்லை. அங்கு முன்னேபின்னர் அங்கிருந்து மேல் சிசிக்சைக்காக அபிராமி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். 6 ம் தேதி வரை அங்கிருந்தார். 6 ம் தேதிக்கு பின PSG மருததுவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர் அங்கு உடல்நிலை மோசமாக உள்ளதாக கூறினார்கள். பணம் செலவு செய்யவேண்டாம் என்று சொன்னார்கள். பின்னர் கோவை அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். பின்னர் 7 ம் தேதியன்று என் அப்பா சிகிச்சை பலனின்றி இறந்துவிடடார். போலிசார் அங்கு வந்து பிரேத விசாரணை

நடத்தினார்ககள். பிரேத பரிசோதனைக்கு பின் உடலை பெற்று எங்கள் வழக்கப்படி நல்லடககம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார். கேரளா வண்டியை ஓட்டியவர் பெயர் ஷியாம்லால் என்றும் வண்டி எண் 9461 என்றும் பின்னர் விசாரணையில் தெரிந்து கொண்டேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.